2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

5. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஏ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, இடைத் தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு மற்றும் பிற பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டத் தொடரின் கடைசி நாள். அடுத்த முறை அவையை எப்போது கூட்டுவீர்களோ? தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லிவிட வேண்டும். நம்முடைய சட்டமன்றத்தில் எம்.எல்.ஏ.-க்கள் சிலபேர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். அந்தத் தொகுதிகளில் இடைத் தேர்தல் நடந்தது. இடைத்தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்

[திரு. துரைமுருகன்] [2020 செப்டம்பர் 16

வந்துவிட்டார்கள். பதவி நீக்கம் செய்யப்பட்டவர் என்ன செய்திருக்கிறாரென்றால், அவருடைய தொகுதி நிதியை செலவு செய்யாமலேயே போய்விட்டார். இப்போது புதிதாகத் தேர்வு செய்யப்பட்டு அந்த இடத்திற்கு வந்த உறுப்பினருக்கு அந்த நிதியைக் கொடுக்க வேண்டும். அந்த நிதியைக் கொடுத்தால்தானே திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரும். அந்த நிதியைக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். இது ஒன்று. இரண்டாவதாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி மேம்பாட்டு நிதி 3 கோடி ரூபாய் கொடுத்தீர்கள். ஒரு கோடி ரூபாய் கொரோனா நிவாரணத்திற்கு என்று சொன்னீர்கள், எடுத்துவிட்டீர்கள். மீதம் 2 கோடி ருபாய் இருந்தது. அதிலும் 25 இலட்சம் ரூபாய் இன்னொரு கொரோனாவுக்கு என்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஆமாம். ரூபாய் 25 இலட்சத்திற்கு கையெழுத்து போட்டால்தான் ரூபாய் 75 இலட்சம் கொடுப்பதாக Collectors சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நான் practical ஆகச் சொல்கிறேன். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் கேளுங்கள். உங்கள் சட்டமன்ற உறுப்பினர்களையும் கேளுங்கள். (குறுக்கீடுகள்) Excuse me, C.M. Sir, நீங்கள் உங்கள் சட்டமன்ற உறுப்பினர்களையும் கேளுங்கள். கொரோனா போய்விடுமென்றால் 1 கோடி ரூபாய் தாராளமாகக் கொரோனா நிவாரணத்திற்குக் கொடுக்கட்டும். மீதம் 2 கோடி ரூபாய் இருக்கிறது. இந்த 2 கோடியிலும் 25 இலட்சம் ரூபாய் கொடுங்கள் என்றால் எப்படி? கொரோனா, கொரோனா என்று கொடுத்துக்கொண்டே இருப்பதா? நாங்கள் மீதம் வைத்திருப்பது 1.75 கோடி ரூபாய். இந்த 1.75 கோடி ரூபாயைக் கொண்டு தேர்தல் நேரத்தில் நாங்கள் வேலை செய்வோம். அதற்கு conditions ஏதும் போடாமல், எம்.எல்.ஏ.-க்கள் இஷ்டத்திற்குக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். கொடுப்பீர்களா? ரொம்ப நன்றி. (குறுக்கீடு) முதலமைச்சர் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டார். (சிரிப்பு) முதலமைச்சர் அவர்கள் தலையை ஆட்டினால் போதும்.

13. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக